தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.

ந.க.எண். 048951 / எம் / இ4 / 2019, நாள்: 05.09.2019

பொருள்:– பள்ளிக் கல்வி – திட்ட ஆண்டு 2019–20 – மத்திய அரசின் உதவித் தொகை திட்டம் – தேசிய வருவாய் வழி திறன் தேர்வு (National Means-cum-Merit Scholarship Scheme) தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியர்களின் விண்ணப்பங்கள் இணையதளத்தில் பதிவேற்றுதல் – சார்பு.

பார்வை:– 1. இதே எண்ணிட்ட இவ்வலுவலகக் கடிதம் நாள்:27.07.2019.

---

பார்வை (1)ல் காணும் கடிதத்தின் படி 2019–20 (தேர்வு – நவம்பர் 2018) ஆம் கல்வியாண்டில் மத்திய உதவித் தொகை திட்டமான, **தேசிய வருவாய் வழி திறன் தேர்வு (National Means-cum-Merit Scholarship Scheme)** கல்வி உதவித்தொகை பெறுவதற்கு தகுதிபெற்ற மாணவ / மாணவியர்களின் விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றுதல் சார்ந்து ஆய்வுக்கூட்டம் 09.08.2019 அன்று சென்னையில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில் 2019–20 திட்ட ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை பெற தகுதியுள்ள மாணவர்கள், அதாவது 2019–20 ஆம் கல்வி ஆண்டில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு புதிதாக விண்ணப்பங்கள் பதிவேற்ற வேண்டும். மேலும், இந்த கல்வி ஆண்டில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் முந்தய ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விண்ணப்பங்களையும் இணையதளம் வாயிலாக (Renewal application) புதுப்பிக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

2019–20 ஆம் கல்வி ஆண்டில் புதிதாக தகுதி பெற்ற 6695 மாணவர்களில் 05.09.2019 நாள் நிலவரப்படி 18 மாவட்டங்களிலிருந்து 357 விண்ணப்பங்கள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டுளளன. இதர மாவட்டங்கள் பணியினை நாளதுவரை துவங்கவில்லை. மேலும், புதுப்பித்தல் பணிகளும் மிகமிக சொற்ப அளவிலேயே நடைபெற்றுள்ளது. ஆகவே, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை விண்ணப்பிக்கும் போது கவனத்தல் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**விண்ணப்பங்களை பதிவேற்றும் போது எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் தீர்வுகளும்:**

1. மாணவர்களின் பெயர், பிறந்த நாள், மற்றும் தந்தை பெயர் : NMMSS தேர்ச்சி அறிக்கையில் உள்ளவாறு பயன்படுத்த வேண்டும்.

2. Category : SC/ST தவிர மீதமுள்ள அனைத்து விரிவு மாணவர்களுக்கும் "General" எனப் பயன்படுத்த வேண்டும்.

3. வருமானம் : 1,50,000/– குறைவாக பதிவிட வேண்டும்.

4. Roll No: 8 இலக்கத்தில் **NMMSS** தேர்வு எண்ணை பயன்படுத்த வேண்டும். (NMMSS தேர்ச்சி அறிக்கையில் இருக்கும்)

5. 9 மற்றும் 10 வகுப்பு மாணவர்களுக்கு புதிதாக விண்ணப்பிக்கும் போது "Pre Matric" என்றும் 11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களுக்கு புதிதாக விண்ணப்பிக்கும் போது "Post Matric" என்று பயன்படுத்த வேண்டும்.

6.10,11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களின் விண்ணப்பங்கள் புதுப்பித்தல் செய்ய வேண்டும் எனில், ஏற்கனவே **"User ID & Password"** இருந்தால் Academic Year 2019–20 என்ற இணையதளத்தை பயன்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

7. அவ்வாறு ஏற்கனவே **"User ID & Password"** இல்லாமல் உள்ள 10,11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களின் விண்ணப்பங்களை 9 ஆம் வகுப்பு மாணவர்களின் விண்ணப்பங்களை பதிவேற்றும் முறையினை போலவே, புதிதாக விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் மாணவனுடைய தகவல்களை தற்போது உள்ள நிலவரப்படி பதிவிட வேண்டும். (Present Class, Previous Class & etc..)

8. மாணவர்களுடைய விண்ணப்பங்களை பதிவேற்றும் போது ஆதார் அட்டையில் உள்ளவாறு பெயர் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு திட்டத்தின் பெயர் தோன்றாமல் **"Final Submit"** செய்ய இயலாத நிலை உள்ளது. அவ்வாறு உள்ள விண்ணப்பங்களை மாணவர் அளவில் **"Withdrawal Application"** செய்துவிட்டு, மீண்டும் புதிதாக விண்ணப்பித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுறது.

ஆகவே, மேற்கண்டவாறு எவ்வித தவறுகளும் ஏற்படாத வண்ணம் மாணவனுடை விண்ணப்பத்தினை பதிவேற்றும் செய்யும் பட்சத்தில் எவ்வித இடர்பாடுகளுமின்றி விண்ணப்பங்கள் **"Final Submit"** செய்ய முடிகிறது. எனவே, தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள பணியாளர்களை முறையாக பணி அமர்த்தி இப்பணிகள் அனைத்தையும் 30.09.2019 க்குள் நிறைவு செய்து மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையை பெற்று வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

05/09/2019

நகல்!
அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்